திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, 1970 ஆம் ஆண்டில் பெய்த பெருமழையின் காரணமாக வீழ்ந்த வீடுகள் 27-ல், 20 அரசாங்கத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட ஹரிஜன காலனி வீடுகளாகும். அந்த 20 வீடுகளும் மழையில் இடிந்து வீழ்ந்து விட்டன. கூரை சாமான்கள், கம்புகள், கதவுகள், ஆகிய வற்றையெல்லாம் அந்த மக்கள் எடுத்து வைத்திருந்தார்கள் திரும்பக் கட்டிக் கொள்வதற்கு ரூபாய் 1,000 கடனைக் கேட்டார்கள். அவைகள் அரசாங்கக் கட்டிடங்களானதால், அவற்றை தனியார் ஒன்றும் செய்யக்கூடாது, அதற்காக கடனும் கொடுக்க வாய்ப்பு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அந்த ஏழைகளின் வீடுகளை உடனடியாகச் சீர் செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, ரூபாய் 1,000 மான்யமாகக் கேட்டார்கள். ஹரிஜன இலாகா அரசாங்க வீடுகளுக்குத் திரும்பக் கட்டிக் கொள்வதற்கு மான்யமும் கொடுக்க முடியாது என்று தெரிவித்துள்ளது. தக்காலிக் கடனைக் கொடுப்பதற்கு அந்த இலாகா நடவடிக்கைகள் எடுத்து அரசுக்குக் குறிப்பு அனுப்பியிருக்கிறது. விரைவில் பரிசீலித்து, முடிவு எடுக்கப்படும்.

Artificial Insemination Centre of the Veterinary Department.

*317 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that an Artificial Insemination Centre of the Veterinary Department is situated at the entrance of Shri Brahadeeswara Temple, Thanjavur; and

(*b*) if so, whether there is any move to shift it to any other suitable place?

கால்நடை மருத்துவத்துறையைச் சேர்ந்த செயற்கை முறை கருத்தரிப்பு நிலையம்

திரு. எல். பலராமன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர், அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலயத்தின் நுழைவாயிலில், கால்நடை மருத்துவத் துறையைச் சேர்ந்த செயற்கை முறை கருத்தரிப்பு நிலையம் ஒன்று அமைந்துள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அதனை வேறோர் தகுந்த இடத்திற்கு மாற்ற செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) கால்நடை மருத்துவ மனையுடன் இணைந்த கேந்திர கிராம நிலையம் ஒன்று செயற்கை கருத்தரிப்பு வசதிகளுடன் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது.

(இ) இது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கே. எஸ் கணபதி : தலைவரவர்களே, திருக்கோவில் என்பது ஒரு பொதுவான இடம். அங்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள், அனைவரும் வருகிருர்கள். அப்படி வந்து செல்கின்றவர்களுக்கு இது இடையூருக இருப்பதால், உடனடியாக இதை அகற்றுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே, நான் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். அறநிலையத் துறையின் கருத்தை அறிந்து தான் செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இதிலே கருத்து வேற்றுமைக்கே இடமில்லை. உடனடியாக நீக்கினுல் நலமாகவிருக்கும் என்று கருதுகிறேன்.

Cases Booked by the Vigilance and Anti-Corruption Directorate

* 318 *Q.*—THIRU M. ARUMUGASWAMI (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any cases have been booked by the Vigilance and Anti-corruption Directorate, within the last six months against any Officers of the Civil Supplies Department; and

(*b*) if so, the details thereof?

ஒழுக்கக் கண்காணிப்பு, லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகத்தாரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உணவு வழங்கல் துறையின் அதிகாரிகள் எவர் மீதேனும் கடந்த ஆறு திங்களில் ஒழுக்கக் கண்காணிப்பு லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகத்தாரால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?